குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.216/2018

அ.சா.3

2025-ம் ஆண்டு ஜனவரி 29-ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 03-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்	சுகன்யா	ஜாதி	
கணவர் பெயர்	ஏழுமலை	தொழில்	
கிராமம்		சமயம்	
தாலுக்கா		வயது	

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.43 மணி,

Accused A2.Thamaraiselvan, A3.Narayanan, A4.Karthikraja absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. A1.Chinnathangam died and charge abated. Advocate Mr.P.Soundararajan present for all accused. APP Mr.P.Suresh present.

முதல் விசாரணை :

1. நான் எள்ளாயூரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் மாமனார் மற்றும் மாமியார். எதிரிகளைத் தெரியும். எங்களுக்கு சொந்தமான நிலத்தில், வழிவேண்டும் என்று கேட்டு எதிரிகள் அடிக்கடி பிரச்சினை செய்து வந்தார்கள். கடந்த 21.10.2017 ஆம் தேதி மாலை 03.00 மணியளவில் எதிரிகள் நால்வரும் எங்கள் வீட்டருகே வந்து, ஏன்டி கண்டாரஓலி, தேவடியா பையா என்று அசிங்கமாக எனது மாமனார் பழனி மற்றும் மாமியார் பழனியம்மாளை பார்த்து திட்டினார்கள்.

2. அப்போது, சின்னதங்கமும், தாமரைச்செல்வன் இருவரும் எனது மாமனாரை கையால் அல்லையில் மாறிமாறி குத்தினார்கள். அப்போது தடுப்பதற்காக எனது மாமியார் வந்தபோது, நாராயணனும், கார்த்திக்ராஜாவும் எனது மாமியாரை கையால் மாறிமாறி குத்தினார்கள். சத்தம் கேட்டு நான் ஓடி வந்து பார்த்தபோது, எதிரிகள் நால்வரும் உங்களை என்றைக்கு இருந்தாலும் குடும்பத்தோடு எரிக்காமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள்.

3. நான், எனது மாமியார் மற்றும் மாமனாரை சேலம் அரசு மருத்துவமனையில் மருத்துவமனையில் சேர்த்தோம். இதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் வந்து, சம்பவம் நடந்த இடத்தில் விசாரணை செய்தார்கள். வரைபடம் வரைந்தார்கள். பின்பு என்னிடம் சாட்சி கையெழுத்த கேட்டார்கள். நானும், எனது கணவர் ஏழுமலையும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

4. அ.சா.1, அ.சா.2 எனது மாமனார், மாமியார் என்றால் சரி. எல்லாபூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி செல்லும் ரோட்டில் மேற்கு திசையில் எங்களுக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரி. எங்களது நிலத்திற்கு தெற்கு பகுதியில் லட்சுமன முதலியாரின் நிலம் உள்ளது என்றால் சரி. எதிரிகளின் நிலமும், மேற்படி ரோட்டிற்கு தெற்கு பகுதியில் தான் உள்ளது என்றால் சரி.

5. எங்களது நிலத்திற்கும், லட்சுமண முதலியாரின் நிலத்திற்கும் இடையில் ஒரு இட்டேரி ரோடு உள்ளது என்றால் சரி. மேற்படி இட்டேரி ரோடு வழியாக தான் வழக்கு எதிரிகள் அவர்களது நிலத்திற்கு செல்லவேண்டும் என்றால் சரி. எங்களது காட்டிற்கு கீழ்தளத்தில் இட்டேரி ரோடு உள்ளது என்றால் சரி. வழக்கு சம்பவம் நடைபெற்ற போது நான் வீட்டில் இருந்தேன். இருதரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, சத்தம் கேட்டு வெளியே வந்தேன். அப்போது வீட்டின் பின்பக்கம் 100 – 150 மீட்டர் தூரம் இருந்தேன்.

6. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும்போது, அக்கம்பக்கத்தினர் 20 – 30 நபர்கள் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரி. அவர்கள், சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை விலக்கிவிட்டார்கள் என்றால் சரி. அப்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 மட்டும் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் சரி. அதன்பின்பு, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ நான், வீட்டிற்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரி. அதன்பின்பு, எதிரிகள் மீது எதிரிகள் மீது புகார் கொடுக்க அ.சா.1, அ.சா.2 உடன் பேசி முடிவெடுத்தோம் என்றால் சரி.

7. அப்போது, அ.சா.1, அ.சா.2–ற்கு ரத்தக்காயம் எதுவும் இல்லை என்றால், அ.சா.1–ற்கு மட்டும் வலதுகாலின் பெருவிரலில் ரத்தக்காயம் இருந்தது. அ.சா.2–ற்கு ரத்தக்காயம் இல்லை. அ.சா.1–ற்கு மேற்படி காயம் இருந்தாக நான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும், தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. எதிரிகளுக்கும், எங்களுக்கும் இட்டேரி ரோடு தடம் சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரி. லட்சுமன முதலியாரின் நிலத்தை நாங்கள், விலைக்கு வாங்க முயற்சித்தோம் என்றால் இல்லை. மேற்படி நிலத்தை எதிரிகள் கிரையம் வாங்க முற்பட்டது பற்றி எங்களுக்கு தெரியாது. நாங்களும், எதிரிகளும் விலைக்கு வாங்க முயற்சித்தோம் என்றாலும், அதனால் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

9. இவ்வழக்கு சம்பவத்தில், யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்பு, சுமார் 03.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம். வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 03.00 மணிக்கு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எங்களது வீட்டிற்கு பழனிசாமியின் நிலம் உள்ளது. சின்னதம்பி என்பவரது காடு எங்களது நிலத்திற்கு அருகில் உள்ளது. அவரது வீடு சற்று தூரத்தில் உள்ளது.

10. எங்களது நிலம் 1 ஏக்கர் 10 சென்ட் அளவிலானது. அதனைச் சுற்றி மற்றவர்களின் விவசாய நிலங்கள் உள்ளது. சம்பவத்தின்போது, அருகில் உள்ள நிலங்களின் வேலையாட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரி. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், அ.சா.1 எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. சம்பவம் உண்மையெனில், சம்பவ இடத்திற்கு அருகிலிருந்தவர்களிடம் கையொப்பம் பெற்றிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ அடிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக நான் காவல் நிலையம் சென்றிருந்தேன் என்றால் சரி. அங்கு என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள்

என்றால் சரியல்ல. நான், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, அ.சா.1–ற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 04.08 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.